# ஒரு புதிய இருதயம்
## (A NEW HEART)

நம்முடைய சரீரத்தில் ஆரோக்கியமாகவும், திறமையாகவும் இருக்கவேண்டிய ஒரு உறுப்பு இருதயம். இது மற்றெல்லா உறுப்புகளைவிட கூடுதல் வேலை செய்கிறது. முக்கியமாக இது, தண்ணீர் இறைக்கும் பம்பு போன்ற ஒரு இரட்டை இயந்திரம், முதலாவது இது, இரத்தத்தை உடம்பெல்லாம் சுற்றி ஓட வைக்கிறது. பின், அசுத்த இரத்தத்தை சுத்தம் செய்வதற்காக, நுரையீரலுக்கு அனுப்புகிறது. இரத்தமே ஜீவன். இருதயம் ஒழுங்காக இயங்காவிட்டால், இரத்தஓட்டம் நிற்கிறது. பின் மரணம் ஏற்படுகிறது.

இருதய நோயால் கஷ்டப்படுகிறவர்களுக்கு, ஆரோக்கியமான இருதயம் ஒன்றை மாற்றி அமைக்கக்கூடும் என்ற டாக்டர்களின் திற மையைப் பற்றிய செய்திகள் அதிகமாக வந்து கொண்டிருக்கின்றன. இது, வைத்திய விஞ் ஞானத்தில், பெரும் முன்னேற்றமாக போற் றப் படுகிறது. ஏனென்றால், இது அநேகருக்கு வாழ்க்கையின் சுகங்களை இன்னும் கொஞ்சக் காலம் அனுபவிக்க ஆயுட்காலத்தை நீட்டிக் கொடுக்கிறது. இல்லையானால் இவர்கள், கொஞ்சம் கொஞ்சமாக உயிரிழந்துகொண்டே யிருப்பார்கள்.

ஆகவே, சுகத்தை சந்தோஷத்திற்குச் சம மாகவும், அழிந்துபோகும் இந்த ஜீவன், சிறிதுகாலம் கூட்டிக் கிடைப்பதால் உலகத் தில் நாம் வேறெதையும் விரும்புகிறதைவிட

இதுவே மேலானது எனவும் கருதுகிறோம். ஆனால், இதைவிட வாழ்க்கைக்கு மேலானது வேறொன்றும் இல்லையா? அல்லது, இருதயம் திறமையாக உண்டாக்கப்பட்ட ஒரு இயந்திர மாயிருப்பதைவிட வேறொன்றும் இல்லையா?

மூளையானது, அறிவின் இருப்பிடம் எனக் கருதப் படுவதைப்போல இருதயமும், பாசத் திற்கும், தெம்பான உணர்ச்சிக்கும் இருப்பிட மெனக் கருதலாம். இவ்விதமாக ஒரு மனி தனை, ''கனிந்த உள்ளம்'' அல்லது ''விசால இருதயம்'' படைத்தவன், அல்லது ''இருத யமே இல்லாதவன்'' என்றும் நாம் சொல்லு கிறோம். ''எல்லா காவலோடும் உன் இருத யத்தைக் காத்துக்கொள், அதனிடத்தினின்று ஜீவ ஊற்று புறப்படும்'' என்று வேதாகமம் நமக்குப் போதிக்கிறது.

தேவனுடைய பார்வையில், சன்மார்க்கமும், ஆவிக்குரிய தன்மையுமாயிருக்க வேண்டிய இருதயத்தில், சரீர பரிசோதனையின் போது அதில் கண்டுபிடிக்கப்படும் நோய்களைவிட அதிக நோய் உடையதாயிருக்கிறது. மனித னுக்கு தேவையான சன்மார்க்க நிபந்தனையின் சுருக்கம் ஒன்று சரித்திரத்தின் ஆரம்பத்தி லிருந்தே கொடுக்கப்பட்டிருக்கிறது. இதை ஆதி. 6:5ல் காணலாம். '......அவன் இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது என்றும் தேவன் கண்டார். நூற்றுக்கணக்கான வருடங்களுக் குப் பின் தேவன் தம்முடைய தீர்க்கதரிசி களில் ஒருவர் மூலம் பேசும்போது மனிதனின் இருதய நிலைமை முன் இருந்ததைவிட மிகவும் மோசமானதாயிருக்கிறது எனக்கூறி இருக் கிறார்.

''எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும் மகா கேடுள்ளதுமாயிருக் கிறது'' (எரே. 17 : 9) மேலும் நூற்றுக் கணக்கான வருடங்களுக்குப் பின் தேவனு டைய குமாரன் தம்முடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் இவ்வித மாகக் கூறுகிறார். ''இருதயத்திலிருந்து பொல்லாத சிந்தனைகளும், கொலைபாதகங் களும், விபச்சாரங்களும், வேசித்தனங்களும், களவுகளும், பொய்ச்சாட்சிகளும், தூஷணங் களும் புறப்பட்டுவரும்'' மத். 15:19. மனிதவர்க்கத்தின் தற்கால சன்மார்க்க நிலை முன்பு இருந்ததைவிட மாறி இருக்கிறது. என்று சொல்ல முடியுமா? இல்லவே இல்லை.

ஒரு டாக்டர் ஒரு நோயாளியின் நோய் பிடித்த இருதயத்தை மாற்றிவிட்டு, நன் கொடையாகக் கொடுக்கப்பட்ட ஒருவரின் ஆரோக்கியமான இருதயத்தைப் பொருத்த முடிகிறதைப்போல தேவனும் ''உங்களுக்கு நலமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியை கட்டளை யிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாமி சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன் என எசே. 36: 26ல் வாக்களித்திருக்கிறார். இந்த வார்த்தைகளை தாவீது ராஜா ''தேவனே சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என்னிலே புதுப்பியும் என தெளிவாக எடுத்துக்காட்டுகிறார்.

எவ்வளவு நீண்டகாலமானாலும் இருதய அறுவை சம்மந்தமான நன்மைகள் ஒரு சிலருக் குத்தான் கிடைக்கும். ஆனால் தேவனுடைய ஈவு அளவிலடங்காதது, நிபந்தனையற்றது. அவ

ரிடம் தாகமாய் தேடிவருகிற அனைவருக்கும் இந்த ஈவை அளிக்கிறார். சரீர அறுவை, மரணத்தைக் கொஞ்சக்காலம் மாற்றிவைக்கும். ஆனால் தேவனுடைய புதிய இருதயமோ, இரட்சிப்போடும் நித்திய வாழ்வாகிய ஈவோடும் வருகிறது. மனித—மாற்று—இருதயத்தை, இருதய நோயாளிகள் எவ்விதம் விரும்புகிறார்களோ அதைவிட தெய்வீகச் செயலை மனித வாழ்வில் அனுபவமாக வேண்டியது எவ்வளவு அதிக முக்கியமானது. இதன் மூலம் ஒரு புதிய இருதயம் கொடுக்கப்படுகிறது. ஒரு புதிய ஆவி உள்ளிலே வைக்கபடுகிறது. இதைக் குறித்து 2 கொரி. 5: 17ல் வேதவாக்கியம் இவ்விதமாக உறுதி கூறுகிறது. ''ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகளெல்லாம் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின'' என்று.

இதை வாசிக்கும் நண்பனே! இது உன்னுடைய அனுபவமாயிருக்கிறதா? அல்லது நீ பாவ நோயினால் ஊசலாடிக் கொண்டிருப்பதில் திருப்தியாயிருக்கிறாயா? நீ தேவனிடத்தில் வந்து உன் பாவங்களை அறிக்கையிட்டு அவரிடம் மன்னிப்பும் சுத்திகரிப்பும் கேட்டு ஒரு புதிய இருதயத்தை அடையமாட்டாயா?

இந்தக் கைப்பிரதியை வாசிப்பதின் மூலம் உன் வாழ்க்கையை கிறிஸ்துவினிடம் அற்பணிப்பாயானால் எங்களுக்கு எழுதி அறிவி, நாங்கள் உனக்கு விசுவாசத்தைக் கட்டி எழுப்பும் புத்தகங்களை அனுப்புவோம்.

"A New Heart" **The Light of Hope** • Cheppad P.O.
Tamil-1 Alappuzha Dist - 690 507 • Kerala State, India